

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் தென்மராட்சி
வீடத்தற்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் திருமதி சுப்பிரமணியம் நகுலாம்பிகை

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவுச்சுரங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2008.09.15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



யாழ்ப்பாணம் - தெல்லிப்பளையைப்
பிறப்பிடமாகக் கொண்டவரும்

தென்மராட்சி - விடத்தற்பளையை
வதிவிடமாக கொண்டவரும்

பரந்தன் இரசாயணக் கூட்டுத்தாபன முன்னாள்
உத்தியோகத்தர்

திரு - சரவணமுத்து சுப்பிரமணியம்
அவர்களின் பிரிய பத்தினியுமாகிய

**திருமதி சுப்பிரமணியம் நகுலாம்பிகை**
**அவர்களின்**

சிவப்பதப் பேறு குறித்த

# நினைவுச்சுரங்கம்

**2008**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பணம்...

## அம்மா உம் பொன்னடியில்
## சமர்ப்பணம்....!

கண் கண்ட தெய்வமே!
காசினியில் –
ஈன்று புறந் தந்து
சான்றோராய் வாழ வைத்த
ஆருயிர் அன்னையே!
கோடி கொடுத்தாலும்
ஈடாகா அன்புக்கு
கைமாறேது?
அம்மா! எம் ஆருயிரே!
உங்கள் பிரிவாற் துடித்து
நெஞ்சத்து நேசஞ் சுமந்து
எம் இதய காணிக்கையாக
இம் மலரை
உமது பொற்பாதத்தில்
அர்பணித்து –
அஞ்சலித்து வணங்குகின்றோம்!
அமைதி கொள்க!
எம் தாயே!

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

- அன்புக் கணவர்
- ஆருயிர் மக்கள்
மருகர் –பேரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உ

சிவமயம்

சீரொடு மண்ணில் வாழ்ந்து - எம்
சிறப்புக்கு வித்தாய் நின்று
பாரொளிர் சுடராய் ஆகி - இன்று
பரமன் தாள் சேர்ந்த எங்கள்
"பாச அன்னை"

# திருமதி சுப்பிரமணியம் நகுலாம்பிகை

அவர்கள்



மண்ணில்
1940.05.01

## திதி நிர்ணயம்

விண்ணில்
2008.08.16

சாற்றுநற் சர்வதாரி சாரடி முப்பத்து ரண்டுதேதி
ஏற்றமிகு பூரணைநாள் சனியாம் நாளில் - வீற்றிருந்தே
நல்லறங்கள் ஆற்றும்எம் நற்றவத்தாள் நகுலாம்பிகை
வல்லவனின் தாளடைந்த நாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்க்கு ஒரு தாலாட்டு

அங்கம் நொந்தெம்மை அரும்பத்துத் திங்களிங்கு
ஆதரவாய் சுமந்து ஆசையொடு பெற்றெடுத்து
பொங்கும் அன்பீந்து புகழாரும் வாழ்வீந்து
போற்றலுற வாழவைத்த புண்ணியமே எம் தாயே!
எங்கும் இருள் சூழ இடர் சுமந்து நாம்வாட
எமைவிடுத்து இன்று தனிவழியே போனீரோ?
தங்கமே தாரகையே தாழாது எமைப்புரந்த
தாயே தாலேலோ தவப்பயனே தாலேலோ...!

நொந்து சுமந்திங்கு நோவாம லேந்தி முலை
தந்து வளர்த்தெடுத்த தண்டமிழே தாலேலோ!
சொந்தம் சூழநின்று சுடரீந்து எமையாக்கும்
சுந்தரியே தாயே சுடரொளியே தாலேலோ!
பந்தம் வாழவென்று பாசத்தாற் பலசெய்த
பண்புருவே பரமன் பாசத்தாள் தாலேலோ!
சந்தக் கவியழகே! சாற்றுதமிழ்ப் பண்ணமுதே!
சங்கரனார் தாளிணைகள் சார்ந்தே தாலேலோ!

நெஞ்சிற் சுமந்தும் நினைவுகள் மனத்துன்னி
நேசமொடு பாடிப் பணிந்தோம் குலவிளக்கே!
தஞ்சம் ஈந்தெம்மைத் தாங்கி வளர்த்தெடுத்த
தண்மதியே தாயே தயாபரியே மறப்போமா?
வஞ்சக் காலனவன் வலைவீசி எம்முயிர்கள்
வாட்டமுறப் பிரிந்தாலும் வாடா நினைவுகளே!
கொஞ்சும் குயிலேயெம் குலமயிலே அம்மா நாம்
கோடி பூச்சொரிந்து கும்பிட்டோம் சாந்தி கொள்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி சுப்பிரமணியம் நகுலாம்பிகை
## அவர்களின்
## வாழ்க்கைச் சுவடுகள்

சம்பா வெளி வாழும் சங்கரனார்
புத்திரனே!
எம்பாலிரங்கி ஏற்றம் பல நல்கும்
தும்பிக் கை ஐயா!
தூய திருவடிகள்
நம்பிக் கை தொழுதோம்!
நம் தாய்க்கு
அடைக்கலமே .......!

அது பழச் சுவையென அமுதென
அமரரும்
தொழுதெழத் தூய எம்
புதுக்குளம் மருவிய
தலை மகள் தாயே அம்மா அடியினை
தொழுதனம் - என்றும்
தூயதாள் அடைக்கலம்!

தாயாய் தமிழாய் தாழாது எமைப்புரந்த
தங்கமாய் ஒளிர்ந்த
தவமகளின் புகழெழுத
சேயார் வரையுமிந்த செந்தமிழ் கல்வெட்டு
சிறப்பொளிர என்றும்
தெய்வத்தாள் அடைக்கலமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிவப்புக் கடுக்கன் செல்லையா"
என்றபெயர்
சின்னக்குழந்தைக்கும் அத்துப்படி!
தெல்லிப்பளை
வாழ்ந்த மறவன், திசையாவும்
புகழ் வரைந்த
வல்லன்- வாஞ்சையோடு
மாரிமுத்து என்னும் அணங்கை
தொல்லுலகம் போற்ற தூயமணம்
செய்து வந்து
நல்வினைகள் நற்றவங்கள்
நனியாற்றி ஈன்றெடுத்த
சொல்லு புகழ் கொண்டு சுவைபடைத்த
மக்களுள்ளே
செல்வி நகுலாம் பிகையென்னும்
நல்லெழிலாள்
இளைய மகளாய் இந்நிலத்தில்
உதித் துயர்ந்தாள்

கடலெங்கும் கப்பலோட்டி
கருத்தொரு வணிகம் ஆற்றி
திடமுறப் பொற்குவை குவித்த
குலமதில்
பஞ்சவர் சோதரர் சூழ
எங்கள் பைங்கிளி நகுலாம்பிகை
கடைக்குட்டி மகளாய்
கண்மலர்ந்தாள் அவள் வரவால்
இன்பக்குலம் மலர்ந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றலுறு பொலிஸ்துறையில்
புகழோடு பணியுவந்த
உயர் உத்தியோகத்தர் நமசிவாயம்!
பூவையள் போற்றும் "பெரியண்ணா" ஆயினார்!
அவர் வழியே -
ஸ்ரீமதி என்னும் செய்தவச் செல்வி
மைத்துனி ஆயினள்
காங்கேசன் -
சீமெந்துக் கூட்டுத்தாபனம் தன்னில்
உயர்பணி ஆற்றிய
முத்தையா பிள்ளையின் முகிழ்த்துயர் நாயகி
சிவக்கொழுந்து எனவரும் செல்வி
நகுலாம் பிகை மகிழ்
"பெரியக்கா" எனும் பெருமை பெற்றனள்!

புகழார்ந்த தமிழறிஞர் -
தமிழ்ப் பணியால் மாநிலத்தில்
மறைந்தும் மறையாத மாண்பு பெற்ற
"தமிழ் மணி" நடராசா
அஞ்சுகத்தாள் அன்புமிக்க அண்ணனாய்
அரண் செய்தார் அவர்வழியின்
கனகம்மா - கண்ணிறைந்த
மைத்துனியாய் வந்து மனம் நிறைந்தாள்!
கொழும்பு -
கப்பற்துறை அதிகார சபை அதனில்
உயர்பணி ஆற்றி உவந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஸ்ண பிள்ளை போற்றும் மனையரசி
சிவபாக்கியம் -
நகுலாம்பிகை மகிழும் "நடுவில் அக்கா"
ஆகி நின்றாள்!
வெலிமடையில் -
புகழளந்த வர்த்தகம் ஆற்றிய
மயில்வாகனத்தின்
இதயநாயகி என மிளிரும் சரஸ்வதியாள்
"இளைய அக்கா" என நின்று இனிமை சேர்த்தாள்!
உடன்பிறந்தார் ஐவர் சூழ
உவந்து நின்ற உத்தமி எம்
நகுலாம்பிகை -
கலைகள் பலவும் கவினுறக் கற்று
கல்வி கேள்வி கருது மெய் ஞானம்
நல்லெழில் என்ன நலம் பல உற்று
திருமணம் முவந்து மணமக ளானாள்!

திருமிகு தென்மராட்சியில்
வருவள விடத்தற் பளைதனில் வதிந்த
சரவணமுத்து சின்னத்தங்கம்
பயந்த புதல்வனாம் பைந்தமிழ் செல்வன்
ஏக புத்திரன் சுப்பிர மணியன்
இலங்குநற் காரிகை நாயகன் ஆயினன்
சுப்பிரமணியனாம் சுந்தர தீபனும்
செப்புநற் செல்வி நகுலாம்பிகையும்
பேசரும் இல்லறப் பண்புகள் பேணியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருகுநற் றவத் தொடு தான தர்மங்கள்
உருகியே ஆற்றியும் உயர்சம் பாவெளி
உறைதரு விநாயகர் திருவருள் கூடியும்
புதுக்குளம் அமர்ந்தருள் பொழிதரு
நாயகி -
பொற்புறு அம்மனின் பேரருள் நாடியும் -
வண்மை கொள் மக்களாம்
நால்வரை ஈந்து
வையகத் தொளி தர வளர்த்து ஆளாக்கினர்
கண்ணிறை முதன் மகன் என்றே
கணேசதாஸ் அமைந்து கவின் பல ஈந்தனன்
கணேசதாஸின் வழிவரு மருகியாய்
நுணாவில் மத்தியூர் -
குமாரசாமி சரஸ்வதி என்போர்
நயந்த புதல்வி நற்றவப் பாவையள்
சாந்தகுமாரி அமைந்து பொலிந்தனள்
அவ்வழி -
கீர்த்தனா, ருசானி, பிருந்தாபன் எனும்
பேரப்பிள்ளைகள் மனையில் தவழ்ந்தனர்

இதமிகு இரண்டாம் .இனியதோர்
மைந்தனாய்
முருகதாஸவன் முகிழ்த்து உயரந்தனன்
முருகதாஸ் வழிவரு மருமகள் என்னவே
மீசாலை பதியமர் கந்தையா
தெய்வானைப்
பிள்ளை என்பவர் பெற்றநல் லெழிலினள்
அருட்சோதி எனவருள் அருளுறை திருமகள்
நயங்கள் சேர்ந்திடமனையிற் புகுந்தனள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு புதல்வரின் பின்வரு
குலக்கொடி
என்னவே சுபாங்கினி எழில்தர
உதித்தனள்
சுபாங்கினி வழிவரு மூத்தநல் மருகனாய்
உசன் பதிமேவிடும்
இரங்கநாதன் இராசபூபதி
பெற்ற நன்மைந்தன் பெருங்குணச்செல்வன்
பிரபாசங்கர் அமைந்து சிறந்தனன்
அவ்வழி
டிதூஷன் மிதுசா எனவரு செல்வர்
மனைதழ் பேரர் ஆயினர் சிறந்து

சுந்தரச் செல்வியாம் சுமதியென்
பெயரினள்
சுவைமிகு இளைய புத்திரி ஆயினள்
சுமதி வழிவரு மருமகன் என்னவே
உசனமர் சுந்தரம் தெய்வானைப் பிள்ளையர்
உதவிடு புதல்வன் ஸ்ரீதரன் என்னும்
பண்பினண் வந்தே பாரிற் பொலிந்தனன்
அவ்வழி
புருஷோத் தமனொடு வைஸ்தமன்
எனவரு
புகழ்மிகு மழைலைகள் பேரர் ஆயினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளை வளர்த்தெடுத்துப்
பெருமை சேர்த்து
பேசரிய புகழாநல் மருகர் யாரும்
உயர்வுறவே தன்னரிய உவப்பை நல்கி
உயர் பேரர் தமை அணைத்து
உச்சி மோந்து
தயவுடனே உறவோர்கள் ஊரார்
நண்பர்
அனைவருக்கும் உற்றபல உயர்வு நல்கி
கோலமுறு கொடை, பக்தி
சீலம் என்னும் -
கொள்கை வழி நின்று நறும்
பணிகள் ஆற்றி
விதி வரைந்த வழிசேர்ந்து
விண்ணில் வாழும்
தெய்வத்துள் தெய்வமென
ஆனாள் நங்கை!
நல்லெழிளாள் நகுலாம்பிகை
நாமம் நெஞ்சில்
நாள்நாளும் வாழும் அவள்
விண்ணில் வாழும்
தெய்வத்தோ டின்புறவே மலர்கள் தூவி
அஞ்சலித்து அமைதி கொள்வோம்
சாந்தி! சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பஞ்ச புராணம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும் திருவெண்ணீ
- றணியாத திருவில் ஊரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா ஊரும்
- பாங்கினொடு பல தளிர்கள் இல்லா ஊரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா ஊரும் விதானமும்
- வெண்கொடியும் இல்லா ஊரும்
அருப்பொடுமலர்பறித்திட்டுண்ணா ஊரும் அவையெல்லாம்
- ஊரல்ல அடவிக் காடே.

## திருவாசகம்

கடையவனேனைக் கருணையி
னாற் கலந் தாண்டு கொண்ட
விடையவனே விட்டிடுதி கண்டாய்
விறல் வேங்கையின் றோல்
உடையவனே மன்னு முத்தர
கோச மங்கைக் கரசே
சடையவனே தளர்ந்தேனெம்பி
ரானென்னைத் தாங்கிக்கொள்ளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஏக நாயகனை இமையவர்க்கரசை
என்னுயிர்க் கமுதினை யெதிரில்
போக நாயகனைப் புயல் வண்ணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகதிருவீழி மிழலை
விண்ணிழி செழுங் கோயில்
யோக நாயகனையன்றி மற்றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி
யெங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்ற விம்பி
மிக திருவாரூரின்
மழவிடையாற்கு வழிவழியாளாய்
மணஞ் செய் குடிபிறந்த
பழவடி யாரொடுங் கூடியெம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## பெரிய புராணம்

இறவாத இன்பவன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
- உன்னையென்றும்
மறவாமை வேண்டுமின்னும் வேண்டும் நான்
- மகிழ்ந்து பாடி
அறவா நீயாடும் போதுன்னடியின் கீழ் இருக்க என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

காலனிடத் தணுகாதே காசினியிற் பிறவாதே
சீலஅகத் தியஞான தேனமுதைத் தருவாயே
மாலயனுக் கரியானே மாதவரைப் பிரியானே
நாலுமறைப் பொருளானே நாககிரிப் பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்

## – தேற்றம் –

உலக நியதி இதுவென உணர்ந்து
உள்ளம் ஆறுதல் உயர்ந்தோர் இயல்பே!
நலங்கள் பெருகி நானில் வாழ
நாயகன் தாளை நம்மனம் கொண்டே
பலங்கள் பெற்று பாசம் அன்பு ஓங்கி
பாரில் வாழ்ந்து படுவினை போக்கி
தலைவன் தாளை தலைமேற் கொண்டு
வாழ்வோம் வளர்வோம் வளர்க வையமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரனின் உள்ளத்தில் இருந்து ..........

அளவில்லா அன்புதனை சிறப்புடனே எமக்களித்து
அளவான சிரிப்புடனே சினக்காமல் எமைக் காத்தீரே!
பெற்றெடுத்த தாயாக தினேசை பெருமையுடன் வளர்த்தீரே
பேறற்றவனாய் ஆக்கிவிட்டு குஞ்சம்மா எங்கு சென்றீர
கவலைகள் நாம் மறந்து கண்ணியமாய் நாம் வாழ
கனிவுடனே கனமான அறிவுரைகள் கூறிய குஞ்சம்மாவே
பூசை அறை மறந்திரக்கக் கூடும் நீர் – ஆனால்
புஸ்பத்தை மறந்திருப்பீரொ ஒரு வேளை தன்னும்
பண்பான பாசம் என்றும் பாரிலே வாழ்ந்து காட்டி
பார்வையாலே கனிவுதந்த பண்பான குஞ்சம்மாவே
பாவி நான் பலபத்து மைல்களிற்கு அப்பால் – உமை எண்ணி
பதறியே நாம் தவிக்கின்றோம் – எம்மை
காணவில்லையே என காத்திருந்து தேவியை கண்டவுடன்
கடைசிப் புதினங்கள் கதைத்து மகிழ்வீரே
கவலைகள் இருந்தாலும் கன பணியிருந்தாலும்
கனிவுடனே கண் துஞ்சாது கதைத்து துயர் துடைப்பீரே
கடைசிப் பரீட்சை முடிந்தவுடன் வீடுமுறையை உம்மோடு
கழிப்போம் என எண்ணியிருந்தேன் – அதற்குள்
காற்றோடு காற்றாய் கலந்துவிட்டீரே


உங்கள் ஆத்மா சாந்திக்காக

பேரன்
புஸ்பலிங்கராசா தினேஷ்குமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சவிருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது ஆருயிர் அன்னை
திருமதி சு.நகுலாம்பிகை அவர்கள்
நோயுற்றிருந்த காலமதில் -
வேண்டிய வைத்திய சேவைகளை
வழங்கிய -
வைத்திய கலாநிதி டாக்டர்
வி.ஆறுமுகம் ஐயா அவர்களுக்கும் -
அன்னையின் மறைவின் போது ஆகும்
உதவிகளை வழங்கிய அன்பர்கள்
அஞ்சலி ஈந்தவர்கள்
எம்துயரில் பங்கேற்ற அன்பர்கள்
கிரியைகளை
நடத்தி வைக்கும் குருமார்கள்
கலந்து அஞ்சலிக்கும் அன்பினர்கள்
இம்மலரை -
ஆக்கியோன் அச்சமைத்தோர்
மற்றும் -
உற்றார், உறவினர், ஊரவர், நண்பர்கள்
அனைவருக்கும் -
எம் இதயம் நெகிழும் நன்றி அறிதலை
தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி! நன்றி! நன்றி!

விடத்தற்பளை,
மிருசுவில்.

- குடும்பத்தினர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு,
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு,
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.



திவ்யு, அருணன் ப்ர[illegible], [illegible]னை, சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org